இந்த மாதிரி காரியங்களை எல்லாம் செய்வதற்கு அரசு வரை வருவதற்குப் பதிலாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அளவிலே அதாவது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தினுடைய அந்த அளவிலே, இதைச் செய்துகொள்வதற்கான நடைமுறையை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோலான கோரிக்கைகள் சரியானவை யாகவும், தவறானவைகளாகவும், அரசியல் காரணங்களுக்காக சில நேரங்களில் பகுதிகளைப் பிரித்தால்தான், தங்களுடைய ஆதிக்கம் இருக்கும் என்ற அடிப்படையில் சில தவறுகள் அவ் வப்போது நடந்துவிடுகின்றன. அதனால்தான் அரசாங்கத்திற்கு வந்து பரிசீலிக்கப்பட்டு, துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் இப்போது அது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### செயற்கை புல்தரை அமைத்தல்

*10121 திரு. இளம்வழுதி :
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எழும்பூரிலுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான மேயர் இராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் '' Astro Turf '' என்று சொல்லப்படுகிற செயற்கை புல்தரை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ; எழும்பூரிலுள்ள சென்னை மாநக ராட்சிக்குச் சொந்தமான மேயர் இராதாகிருஷ்ணன் விளை யாட்டு அரங்கத்தில் செயற்கை புல்தரை அமைக்கும் திட்டம் எதுவும் மாநகராட்சியின் வசம் இல்லை.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தில் பெங்களூரிலும், மத்தியப் பிரதேசத்தில் போபாலிலும், உத்தரப்பிரதேசத்தில் லக்னோ விலும், பஞ்சாபில் பாட்டியாலாவிலும், இதுபோன்ற 'ஆஸ்ட் ரோ டர்ப்' இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் ஓரிடத்தில் கூட இந்தச் செயற்கை புல்தரை இல்லை. இந்த நிலையிலே,

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1990 ஆகஸ்ட் 20]*

மற்ற மாநிலங்களைப் போல தமிழ்நாட்டிலிருந்து விளையாட்டு வீரர்களை உலக அளவிலே நடைபெறுகிற போட்டிகளிலே கலந்து கொள்கின்ற, தரமுள்ள வீரர்களை நம்மால் உருவாக்க முடிய வில்லை. எனவே, இதைக் கருத்தில் கொண்டு, மீண்டும் அதை அமைக்க முன்வருவார்களா என்று கேட்டுக் கொள்வதோடு மேற்படி செயற்கை புல்தரையை அமைக்கின்றபோது, அதற்கு ஆகின்ற மொத்தச் செலவில் பாதித் தொகையை மத்திய அர சாங்கம் தருகிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புவதோடு....... (மணியடிக்கப்பெற்றது.) அந்தத் தொகையைப் பெற்று.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர் கதை யாக அல்லவா இருக்கிறது ! மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பொறுத்து, தமிழ்நாடு டென்னிஸ் சங்கம் தங்களுக்கு நீண்ட கால குத்தகை கொடுத்தால், அதை ஏற்று நடத்தலாம் என்று தனியார் கழகம் மாநகராட்சிக்கு மனு செய்துள்ளது. தற்சமயம், மாநகராட்சியினு டைய கொள்கை, தங்களுக்கு இடங்கள் தேவைப்படுகிறபோது, யாருக்காவது, நீண்டகால குத்தகைக்குக் கொடுத்துவிட்டால், திரும்பப் பெற இயலவில்லை என்ற அடிப்படையில், நீண்ட கால குத்தகைக்குக் கொடுக்கும் வழக்கத்தை நிறுத்தி வைத் திருக்கிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவலையொட்டி, அவர்கள் மீண்டும் மனு செய்து, தற்போது 21–5–1990-ல் இது சம்பந்தமாக மாநகராட்சி அதி காரிகள், வருவாய்த்துறைச் செயலாளர், கல்வித்துறைச் செய லாளர், சென்னை விளையாட்டு மற்றும் பயிற்சி மைய அதிகாரி கள் ஆகியோருடன், தலைமைச் செயலாளர் அவர்கள் கலந்து பேசி, அதற்கான ஒரு முடிவை எடுக்கலாம் என்பதும், அதற் கிடையில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கர்நாடக அரசின் அந்த டென்னிஸ் சங்கத்திற்கு மாநகராட்சியில் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டது சம்பந்தமாகவும், அவர்கள் செய் துள்ள இதர சலுகைகள் பற்றியும் ஆய்வுக்காக கேட்கப்பட்டு இருக்கிறது. அது கிடைத்தவுடன் பரிசீலிக்கப்படும்.

### நடமாடும் நியாய விலைக் கடைகள்

*6887 திரு. கே. அர்ஜுனன் :
திரு. எஸ். டி. உசம்சந்த் :
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் நடமாடும் ரேஷன் கடைகளை அமைக்க மைய அரசு மாநில அரசைக் கோரியுள்ளதா ?